11. அரசினர் தீர்மானம்.

விதி 33-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' சட்ட மன்றத்தில் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள் —விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, நாளை 24-1-1990 அன்று தளர்த்தி, அந்த நேரத்தை அரசின் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (24-1-1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 18.58 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

53. தமிழ்நாட்டின் தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோகங்களுக்காக ஒதுக்கப்பட்ட மரக்கட்டைகள் குறித்த கணக்குகளை பராமரிப்பது பற்றிய விதிகளை வகுப்பது குறித்து சுற்றுப்புறச் சூழல்-வனங்கள் துறையின் 4-10-1988 ஆம் நாளிட்ட 192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

54. தமிழ்நாடு 1968ஆம் ஆண்டு மரக்கட்டைகள் இடை மாறுபட்டு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து சுற்றுப்புறச் சூழல்-வனங்கள் துறையின் 18-11-1988 ஆம் நாளிட்ட 296 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனங்கள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

55. தமிழ்நாடு 1944ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப் பவர்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 8-1-1988 ஆம் நாளிட்ட 7ஆம் எண்